<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குன்னூர்</u>

**O.S.No. 43/2024 DW -1 நாள்- 09.07.2026.**

**பெயர்: சஞ்சீவ்**

**<u>வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்</u>**
**<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை :</u>**

**1.** எனது சொத்தானது சர்வே எண். 1605/19ல் இடம்பெற்றுள்ளது. எனது சொத்து எனக்கு எந்த வகையில் பாத்தியப்பட்டது என்றால் எனது தாத்தா எங்களுக்கு கட்டிக்கொடுத்த வீடாகும். எனது தாத்தா கட்டிய வீடு என்பதை நிரூபிக்க ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் நத்தம் புறம்போக்கு இடத்தில் வீடு கட்டியதால் அந்த சொத்தின் பட்டாவானது அப்பாவின் பெயரில் உள்ளது. நான் சொல்லும் இடமானது அரசு புறம்போக்கு இடம் என்றால் சரிதான். நான் எனது எதிருரை மற்றும் முதல் விசாரணையில் எனக்கு 525 சதுர அடி பாத்தியப்பட்டது என்று கூறும் நிலையில் அதற்குண்டான ஆவணங்களை நான் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் அரசு நிலம் என்பதால் ஆவணம் எதுவும் வராது பட்டா மட்டுமுள்ளது.

**2.** எனது அப்பா தனராஜ் நான் சொல்லும் சர்வே எண்ணிற்கான பட்டாவானது வா.சா.ஆ.6ல் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.6ல் 0.025 ஏர் என்றுள்ளது அதாவது 269 சதுர அடி என்றால் பட்டாவில் குறைவாக உள்ளது. நான் எனது எதிருரையில் சொல்லியுள்ள 525 சதுர அடி என்பது தவறு என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6ன்படி எனக்கு 269 சதுர அடி பாத்தியம் என்றாலும் நான் எனது எதிருரை மற்றும் முதல் விசாரணையில் 525 சதுர அடி பாத்தியம் என்று நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல.

**3.** நான் எனது தரப்பு ஆவணமாக வீட்டு வரி ரசீதை தாக்கல் செய்துள்ளேன் அந்த ரசீதில் சொத்தின் விஸ்தீரணத்தை பற்றி குறிப்புகள் எதுவும் இருக்காது என்றால் சரிதான். எனக்கு உண்மையில் 525 சதுர அடி பாத்தியப்பட்டிருந்தால் அதற்குண்டான ஆவணங்களை நான் எனது எதிருரையை தாக்கல் செய்யும்போதே தாக்கல்

செய்திருப்பேன் எனக்கு 525 சதுர அடி பாத்தியமில்லாததால் நான் எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் பட்டா எனக்கு குறைவான பரப்பளவிற்கு வழங்கப்பட்டுள்ளது ஆனால் வீட்டை அளந்தால் 525 சதுர அடி தான் இருக்கும்.

**4.** நான் எனது எதிருரை மற்றும் முதல் விசாரணையில் எனது சொத்தானது மூதாதையரின் சொத்து என்று குறிப்பிட்டுள்ள நிலையில் அது பொய் என்றாலும் நாங்கள் அரசாங்கத்தில் ஆக்கிரமித்திருந்தால் அதற்குண்டான இடத்திற்கு மட்டும் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கின் வாதி இடத்தின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும். வாதிக்கு வழக்கு சொத்தானது வா.சா.ஆ.1 ன் வழியாக பாத்தியப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ன் சொத்து விவரத்தில 2 சென்ட் கிரையம் கொடுக்கப்பட்டுள்ளதாக உள்ளது என்றால் அவருக்கு 2 சென்ட் கொடுததவருக்கே அங்கு 2 சென்ட் நிலம் இல்லை.

**5.** மேற்சொன்ன பத்திரமானது 13.03.2003 பதியப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன பத்திரத்தின் அடிப்படையில் வாதிக்கு விற்றவர் ராமன் என்றால் சரிதான். கிரையம் நடைபெற்ற நாளிலிருந்து இவ்வழக்கின் வாதி தான் அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றால் சரிதான். வாதியின் அப்பா லிங்கனுக்கு 5 சென்ட் நிலம் பாத்தியம் என்றால் சரிதான். மேற்சொன்ன 5 சென்ட் நிலத்தில் 3 சென்ட் நிலத்தை ரங்கனுக்கு தானம் செட்டில்மெண்ட் செய்துவிட்டார் என்றால் சரிதான், எனக்கு தேதி நினைவில்லை. எனது எதிருரையில் 1978 ல் தான செட்டில்மெண்ட் ஏற்பட்டுள்ளதாக உள்ளது என்றால் சரிதான்.

**6.** லிங்கனின் மகன் ராமன் 2 சென்ட் நிலத்தை வாதிக்கு விற்றுவிட்டார் என்றால் சரியல்ல, லிங்கனுக்கு சொந்தமாக 5 சென்ட் நிலத்தில் 3 சென்ட் நிலத்தை அவரது ரங்கனுக்கு தானமாக கொடுத்துவிட்டு மீதம் உள்ள 2 சென்டை சகோதரர்கள் மூவருக்கு 2 வீடு அதில் உள்ள நான்கு அறைகளில் 2 அறைகள் ராமன் மற்றும் ராஜுவிற்கு என்று உயில் எழுதி வைத்துள்ளார். லிங்கனின் மகன் ராமன் 2 சென்ட்

நிலத்தை வாதிக்கு விற்றுவிட்டார் என்றால் வாதிக்கு விற்றவருக்கே மேற்சொன்ன காரணத்தினால் அங்கு நிலமில்லை.

**7.** எனது எதிருரையில் லிங்கனின் மகன் பெட்டன் 327 சதுர அடியை மூன்றாம் தரப்பினருக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் ரவி என்பவருக்கு கிரையம் கொடுத்துவிட்டார். 5 சென்டில் 3 சென்ட் தானமாக கொடுத்த பின்னரும் மீதமுள்ள 2 சென்ட் விற்றபின்னரும் அங்கு நிலமில்லை என்றாலும் சரியல்ல. பெட்டன் 2007 ல் 327 சதுர அடியை விற்றுவிட்டார் என்றால் சரிதான்.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக மறுதேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது. )**

R HIMAKRITI

Digitally signed by R HIMAKRITI
Date: 2026.07.09 17:29:06 +0530